REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2020 ஒக்டோபர் 31 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்




வடக்கின் உதயம் 07, 08

வரு. 88 இல. 259 | October 31,Saturday, 2020 | 16பக்கங்கள் | 30/-



முஹம்மது நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் மௌலூத் நிகழ்வு நேற்று கொழும்பு உம்மு சவாயா பள்ளிவாசலில் கலீபதுல் குலபா மௌலவி அப்துல் ஹமீத் (பஹ்ஜி) தலைமையில் நடைபெற்றது. சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்ற வைப்பவத்தில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் இமாம் மௌலவி எம்.எஸ்.எம். தஸ்லீம், உம்மு சவாயா பள்ளிவாசலின் தலைவர் மேக்கி ஹாஷிம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படம்: ருசைக் பாரூக்

### தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம்;

## மிக அவசர தேவைகளுக்கு மட்டுமே அனுமதிப்பத்திரம்

**அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கடும் உத்தரவு**



மிக அவசர தேவையை தவிர தனிமைப்படுத்தல் ஊரடங்கு அனுமதி பத்திரம் வழங்க வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

நேற்று அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையாக சட்டத்தை செயற்படுத்துமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொருட்கள் விநியோகத்தின் போது கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கு அனைத்து தரப்பினரின் ஆதரவு அவசியம்.

கொரோனா வைரஸ் பாதிப்புள்ள பகுதிகளில் திருமண நிகழ்வு மற்றும் மத வழிபாடு உட்பட மக்கள் ஒன்று கூடுவதனை தவிர்க்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## நாட்டுக்கும் பிரதமருக்கும் ஆசி வேண்டி பிரார்த்தனை

### முத்துக்களிலான கலசம் அலரி மாளிகையில் வழிபாடு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டும், கொவிட்19 தொற்று நிலைமைக்கு மத்தியில் நாட்டுக்கு நலம் வேண்டியும் சோமாவதி புனித தலத்திற்கு வழங்கப்படவுள்ள முத்துக்களினால் அலங்கரிக்கப்பட்ட கலசம் (கரடுவ) நேற்று (30) அலரி மாளிகையில் அரச மரத்தடியில் வைக்கப்பட்டது.

பிரதமரின் எண்ணக்கருவிற்கமைய அனைத்து பௌர்ணமி தினங்களிலும் நடைபெறும் 'அமாதம் சிசிலச' தர்ம உபதேசத் தொடரின் 203ஆவது தர்ம உபதேசத்தின் போது

06

### சமூகத் தொற்று இதுவரை இல்லை எனி

# கவனயீனமாக
# விரைவிலேயே




**சுகாதார அமைச்சின் டாக்டர் ஜயருவன் பண்டார எச்சரிக்கை**



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் சமூகத் தொற்று ஏற்படவில்லை என்ற போதிலும், பல பகுதிகளிலும் கிளைக் கொத்தணிகள் உருவாகக் கூடிய வாய்ப்புக்கள் பல உள்ளன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் கவனயீனமாகச் செயற்பட்டால் விரைவில் சமூகப்பரவலுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

நாட்டில் சமூக தொற்று ஏற்படவில்லை என்று எம்மால் உறுதியாகக் கூற முடியும். அதற்கான உறுதிப்படுத்தல்கள் எம்மிடமுள்ளன. ஆனால், சில பகுதிகளில் ஒரே இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே, கிளை கொத்தணிகள் பல உருவாகக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

எனவே நாம் அனைவரும் கவனயீனமாக செயற்படுவோமானால் விரைவில் சமூக தொற்றை நோக்கிச்செல்ல வேண்டியேற்படும். அபாயமான நிலைமைக்கு முன்னால் நாம் நின்று கொண்டிருக்கின்றோம்.

இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலைமையே தொடர்ந்தும் காணப்படுகின்றதால், அபாயநிலைமை குறைந்து விட்டது என்று கூறமுடியாது.

பி.சி.ஆர். பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கமைய இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக் கூடும்.

எனினும், பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் இந்த சந்தர்ப்பத்தில் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

சுகாதார அமைச்சு மற்றும் பாதுகாப்புத்துறை உள்ளிட்டவை ஒன்றிணைந்து

06

### ஊரடங்கிற்கு முன்னதாக வெளியேறியவர்களால்

## நாட்டிற்கு பெரும் ஆபத்து வருவதற்கான வாய்ப்புள்ளது



மேல்மாகாணத்திலிருந்து ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் வெளியேறியவர்களால் நாட்டிற்கு பெரும் ஆபத்து என அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் வைத்தியர் ஹரிதா அளுத்கே தெரிவித்துள்ளார்.

அவர்களை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்களையும்

06

### ஊரடங்கு சட்டத்தினை புறக்கணித்து நேற்று

## கொள்ளுப்பிட்டி ஐந்து நட்சத்திர ஹோட்டலில் திருமண நிகழ்வு

**விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் பொலிஸார்**

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் நேற்று ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்ற திருமண நிகழ்வு தொடர்பாக விசாரணைகள் இடம்பெறுவதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். தனிமைப்படுத்தல் விதிமுறைகளையும், மேல்மாகாணத்தில் நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தையும் புறக்கணித்து ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இடம்பெற்ற திருமண நிகழ்வு குறித்து

06

### பத்தாயிரத்தைத் தாண்டிய நோயாளர்கள்;

## நாட்டில் 24 மாவட்டங்களில் கொரோனா தொற்று பரவல்

**கிளிநொச்சி மாவட்டத்தில் எவருக்கும் தொற்றில்லை**

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை (30) நேற்றைய தினம் 10,105 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றைய தினமும் குருநாகல், பூண்டுலோயா உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் புதிதாக வைரஸ் தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 09 ஆயிரத்து 791 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

06




படம்: ச.கிருஷ்காந்தன்

## பாராளுமன்றப் பேரவை உறுப்பினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



பாராளுமன்றப் பேரவையின் உறுப்பினராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பு (29) பிரதமர் அலுவலகத்தினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. புதிதாக நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் 05 உறுப்பினர்களைக்

06

## PCR இயந்திரங்களை திருத்தும் நடவடிக்கையை விரைவுபடுத்துக

**அரசாங்கத்திடம் சஜித் பிரேமதாச கோரிக்கை**



PCR இயந்திரங்களை உடனடியாக திருத்துதல் ... வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம

## மேல் மாகாணத்திலிருந்து வெளியேறியோரை தேடி பொலிஸார் தீவிரமாக வலைவீச்சு

**சட்ட நடவடிக்கை எடுக்கவும் தயாராவதாக அஜித் ரோஹண தெரிவிப்பு**



## விமானப் படை புதிய தளபதியாக சுதர்சன பத்திரன



இலங்கை விமானப்படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் சுதர்ஷன பதிரண நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை விமானப்